*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC. 66/2021***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-2 (LW-1)***

*Name / Father's Name:* ***திரு.மணிகண்டன் த/பெ. சதீஷ்***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **21.11.2025.**

துவக்க நேரம் 12.53 A.N

**முதல் விசாரணை**

1) நான், தற்பொழுது சேலம் வனக்கோட்டம், வாழப்பாடி சமூககாடுகள் சரகம், பேளூர் பிரிவு வனவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2019 லிருந்து 2021 வரை கருமந்துறை கல்ராயன் வனச்சரகம், பெரியகல்ராயன் பிரிவு வனவராக பணிபுரிந்து வருகிறேன்.

2) கடந்த 26.03.2020 அன்று நான் அலுவலகத்தில் இருந்தபொழுது, மதியம் சுமார் 01.00 மணியளவில் குன்னூர் பீட் வனக்காப்பாளர் திரு.புஷ்பராஜ் என்பவருக்கு கிடைத்த தகவலின் பேரில் அவர் ஸ்டாலின் என்பவருடன் குன்னூர் பீட், பிளாக் III, காப்புநிலத்தை சுற்றி கண்காணித்து வந்தபொழுது, காப்புநிலத்தின் எல்லைப்பகுதியில் விவசாயம் செய்து வந்த ஒரு நிலத்தில் 9 எண்ணிக்கையிலான மயில்கள் இறந்துகிடப்பதாகவும், மேலும் அந்த இடத்தில் வேறு யாரும் இல்லை என்றும் கூறி எனக்கு தகவல் சொன்னார்.

3) நான், உடனே அந்த இடத்திற்கு சென்றேன். சம்பவம் நடந்த சமயம் கொராணா காலம் என்பதால், 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்ததாலும் அங்கு வேறு யாரும் இல்லை. மேற்படி அந்த மயில்கள் எவ்வாறு இறந்தன என்று அந்த இடத்தை சுற்றி பரிசோதித்ததில், ஆங்காங்கே நெல்மணி

குவியல்களும், மேலும் குளோரோபைரிபாஸ் 1.5% DP பூச்சிகொல்லி மருந்து காலியான பாக்கெட் கவர் அந்த இடத்தில் இருந்தன. மேலும் ஆங்காங்கே நெல்மணி குவியல்கள் தூவப்பட்டிருந்தன.

4) மேற்படி அந்த பூச்சிகொல்லி மருந்து கலக்கப்பட்ட நெல்மணிகளை மயில்கள் சாப்பிட்டதால் அந்த மயில்கள் இறந்திருக்கக்கூடும் என்று நாங்கள் தெரிந்துகொண்டோம். மேலும் அந்த பூச்சிக்கொல்லி மருந்தை எடுத்துக்கொண்டால் மயில்கள் நடக்கமுடியாமல் மயக்க நிலையை அடைந்து, மூச்சுத்திணறல் ஏற்பட்டு வேறு எங்கும் போகமுடியாமல் இறந்திருக்கக்கூடும் என்று முடிவுசெய்தோம்.

5) அந்த சமயம் கோவிட் சமயம் என்பதால், அந்த சமயத்தில் கால்நடை மருத்துவர்கள் சம்பவயிடத்திற்கு வரஇயலவில்லை. அதனால் கிராம நிர்வாக அலுவலரை சம்பவயிடத்திற்கு வரவழைத்து அவர் முன்னிலையில், வனக்காப்பாளர் ஸ்தல மகஜர் தயார் செய்து, அந்த ஸ்தல மகஜர் மூலம் 9 மயில்களையும், சுமார் 50 கி அளவு அங்கிருந்த நெல்மணிகளையும், குளோரோபைரிபாஸ் 1.5% DP பூச்சிகொல்லி மருந்து காலியான பாக்கெட் கவரையும் கைப்பற்றினார். அந்த ஸ்தலமகஜரில் உள்ள 1வது சாட்சி கையெழுத்து என்னுடையதுதான். அதில் நானும், வனக்காவலர் ஸ்டாலின் என்பவரும் கையெழுத்து செய்தோம். மேலும் சம்பவயிடத்தில் இருந்த நெல்மணிகளையும், சம்பவயிடத்தில் இருந்த மயில்களையும் புகைப்படம் எடுத்து வழக்கு கோப்பில் தாக்கல் செய்துள்ளோம். பின்னர் மறுநாள் நான் சம்பவயிடத்தில் ஸ்தலபடம் தயார் செய்தேன். **(ஸ்தலபடம் அ.த.சா.ஆ.2, நெல்மணிகள், சம்பவயிடத்தில் இருந்த மயில்களின் புகைப்படங்கள் முறையே அ.த.சா.ஆ.3, 4, 5 ஆகும்).**

6) மறுநாள் மேற்படி இறந்த மயில்களின் பாலினத்தை கண்டறியமுடியாத நிலையில் இறந்த மயில்களின் உடல் சிதிலமடைந்திருந்தது என்று மருத்துவர் கூறியதால், அந்த மயில்களை வனச்சரக அலுவலர்

முன்னிலையில் புதைத்துவிட்டோம். மேற்படி மயில்களை புகைப்படம் எடுத்து வழக்கு கோப்பில் தாக்கல் செய்துள்ளோம். **(மருத்துவர் முன்னிலையில் மயில்களை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்திய புகைப்படங்கள் மற்றும் மயில்களை புதைத்த புகைப்படம் அ.த.சா.ஆ.6, 7 ஆகும்)**. மேற்படி இது குறித்து அக்கம் பக்கம் சம்பவயிடத்திற்கு அருகில் இருந்தவர்களை விசாரித்தபொழுது மயில்கள் இறந்துகிடந்த அருகில் உள்ள நிலத்தினை ராமசாமி த.பெ ராமன் என்பவர் விவசாயம் செய்து வந்ததாக சொன்னார்கள். மேலும் மேற்படி கிராம விவசாயம் செய்து வந்த நிலம் விவசாய நிலம் என்று வருவாய் ஆவணங்களின் மூலம் தெரியவந்ததாக கூறினார்.

7) மேற்படி ராமசாமி த.பெ ராமன் என்பவரை விசாரிக்க அவரை தேடிவந்த நிலையில், அவர் தலைமறைவாக இருந்துவந்ததால், அவரை விசாரித்து ஒப்புதல் வாக்குமூலம் பெற இயலவில்லை. மேற்படி ராமசாமி த.பெ ராமன் என்பவர் அவரது விவசாய பயிர்களை வனவிலங்கு பறவைகள் சேதப்படுத்துவதை தவிர்க்க நெல்மணிகளில் குளோரிபைரிபாஸ் கலந்து வைத்துள்ளது தெரியவந்ததால் அவரின் மீது வழக்கு பதிவு செய்ய வனச்சரக அலுவலருக்கு உதவியாக இருந்தேன்.

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) சம்பவயிடத்திற்கு எத்தனை பேர் சென்றோம் என்றால் எனக்கு முன்பு இரண்டு நபர்கள் சென்றார்கள். அவர்கள் எத்தனை மணிக்கு சம்பவயிடத்திற்கு சென்றார்கள் என்று எனக்கு தெரியாது. நான் எத்தனை மணிக்கு சம்பவயிடத்திற்கு சென்றேன் என்றால் 2 மணிக்கு சென்றேன்.

2) நான் சம்பவயிடத்திற்கு செல்வதற்கு முன்பு VAO, புஷ்பராஜ் ஆகியோர் சம்பவயிடத்தில் இருந்தார்களா என்றால் VAO அந்த இடத்தில்

இல்லை, புஷ்பராஜ் சம்பவயிடத்தில் இருந்தார். அ படிவத்தில் காலம் எண்.9 ல் 1 மணிக்கு புஷ்பராஜ்ம், ஸ்டாலினும் வனப்பகுதியை சுற்றி பார்த்தபொழுது மயில்கள் இறந்துபோனதை முதன்முதலில் பார்த்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அ.த.சா.ஆ–2 ஆவணத்தில் மயில் இறந்துபோனது குறித்து எடுக்கப்பட்ட புகைப்படத்தில் தேதி 26.03.2020 என்றும், நேரம் 12.04 மணி என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான்.

3) எங்கள் அலுவலகத்திலிருந்து, சம்பவயிடத்திற்கு 45 நிமிடத்தில் சென்றுவிடலாம் என்று சொன்னால் சரிதான். சம்பவயிடத்திற்கு நான் சென்ற அரைமணிநேரத்தில் மதியம் 02.30 மணியளவில் கிராம நிர்வாக அலுவலர் வந்துவிட்டார் என்று சொன்னால் சரிதான்.

4) ஸ்தல மகஜரானது எத்தனை மணிக்கு, எந்த தேதியில் தயார் செய்யப்பட்டது என்பதற்குண்டான நேரத்தையும், தேதியையும் அதில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். கிராம நிர்வாக அலுவலர், எங்களது ஸ்தல மகஜரில் கையெழுத்து போடவில்லை என்று சொன்னால் சரிதான்.

5) நான் சம்பவயிடத்திற்கு சென்ற பிறகு அந்த இடத்தில் பொதுமக்கள் யாரும் இல்லை என்று சொன்னால் சரிதான். கிராம நிர்வாக அலுவலர் வழங்கிய அறிக்கையில், அரசு புறம்போக்கு இடத்தில் மயில்கள் செத்து கிடந்ததாகத்தான் இருக்கிறது என்று சொன்னால் சரிதான், மேற்படி இடத்தை எதிரி ஆக்கிரமித்துள்ளார். கிராம நிர்வாக அலுவலர் வழங்கிய அறிக்கையில், மயில்கள் செத்து கிடந்த இடத்தில் எதிரி பயிர் செய்ததாக குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். மேற்படி VAO அறிக்கையில், சம்பவயிடத்திற்கு அருகில் எதிரியின் நிலம் இருப்பதாகக்கூட VAO குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான்.

6) VAO அறிக்கையில், தனக்கு தகவல் வந்த நேரம் மாலை 05.00 மணி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். மருத்துவரின்

அறிக்கையில், மயில்கள் இறந்ததற்கான காரணத்தை குறிப்பிடமுடியாது என்றும், மயில்கள் எதனால் இறந்தது என்பதை கண்டுபிடிப்பதற்கு ஏதுவாக மயில்களின் உடல்கள் இல்லை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். மருத்துவர் மேற்கண்டவாறு அறிக்கை வழங்கியுள்ள நிலையில், இவ்வழக்கில் இறந்துபோன மயில்கள் நெல்மணியை தின்றதால்தான் இறந்துவிட்டது என்ற கருத்திற்கு வரஇயலாது என்றும், இறந்துபோன மயில்களின் பாலினத்தை பற்றி குறிப்பிட இயலாது என்றும் சொன்னால் சரிதான்.

7) மயில் என்பது பறவை இனத்தை சேர்ந்தது என்று சொன்னால் சரிதான். மயில்கள் ஒரு இடத்திலிருந்து வேறொரு இடத்திற்கு ஒரு முறை பறந்தால் ஒரு கி.மீ தூரம் கூட பறக்கும் என்று சொன்னால் சரிதான். மயில் ஒரு இடத்தில் உணவருந்திவிட்டு, மற்றொரு இடத்தில் சென்று உட்கார வாய்ப்பு உள்ளது என்று சொன்னால் சரிதான்.

8) இந்த வழக்கில் சம்பவயிடத்தில் கைப்பற்றப்பட்டதாக சொல்லும் குளோரிபைரிபாஸ் மற்றும் நெல்மணிகளை 6 மாதங்கள் காலதாமதமாகத்தான் நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளோம் என்று சொன்னால் சரிதான். வி.ஏ.ஓ ம் எதிரியின் காடு சம்பவயிடத்திற்கு அருகில் இருந்ததாக சொல்லாத நிலையிலும், அந்த இடத்தில் தனிநபர்கள் யாரும் இல்லாத சூழ்நிலையிலும் இவர்தான் எதிரி என்று எவ்வாறு முடிவு செய்தோம் என்றால் வாட்சரும், கார்டும் அந்த வழியாக சென்ற நபர்களை விசாரித்து முடிவு செய்தார்கள்.

9) இறந்துபோன மயில்கள் வேறு இடத்தில் உணவருந்திவிட்டு, சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்திற்கு வந்து இறந்திருக்க வாய்ப்பு உள்ளது என்று சொன்னால் சரிதான். நான் சொன்னவாறு, சொன்ன தேதி மற்றும் நேரத்தில் சம்பவயிடம் செல்லவில்லை என்றும்,சம்பவயிடத்தில் வழக்கு சொத்தை கைப்பற்றவில்லை என்றும், அனைத்து ஆவணங்களையும் எங்கள் அலுவலகத்தில் வைத்து தயார் செய்துகொண்டு, எதிரிக்கெதிராக இந்த

**வழக்கினை தாக்கல் செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி வழக்கு சம்பவத்திற்கும், எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.**

முடிவு நேரம் 01.50 A.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2025.11.21 17:23:48 +0530

Judicial Magistrate No.2, Attur.